மாண்புமிகு திரு. அ. மில்லர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பூம்புகார் பகுதியில் ஏற்கெனவே சிறுவர் பூங்கா இருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–10

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 63, டாக்டர் (திருமதி) ஆ. கருப்பாயி, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

63—

பணி நிரந்தரம்

***35441—டாக்டர் (திருமதி) ஆ. கருப்பாயி:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குளத்தூர் தொகுதி, காவேரி நகரில் தைலா சில்க் ஸ்பின்னிங் மில் நிறுவனத்தில் பணிபுரியும் தொழிலாளர்களை பணி நிரந்தரம் செய்திட சாத்தியக்கூறுகள் பற்றிய ஆய்வு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

இவ்வுலகில் நான் பெற்ற பெரும் பாக்கியம் மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் தொண்டனாய் வாழ்வதுதான். காக்கி உடையை அணிந்து கொண்டு சாதாரண போக்குவரத்துத் தொழிலாளியாக இருந்த என்னை தொழிலாளர் நலத் துறை அமைச்சராக்கி எனக்குப் பெருமையைத் தந்த மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன். தமிழக சரித்திரத்திலேயே சாதாரண ஒரு தொழிலாளியாக இருந்த என்னை தொழிலாளர் நலத் துறைக்கு அமைச்சராக்கி, உழைக்கும் வர்க்கத்தின் உணர்வுகளைப் புரிந்து, உழைப்பதற்கு உத்தரவிட்ட உன்னதமான தலைமைதான் அம்மா நீங்கள். அத்தகைய நல்லெண்ணம் மிக்க, நாடு காக்கும் நல்ல இதயம் கொண்ட தாய்க்கு நான் மட்டுமல்ல, என் தலைமுறையே தாள்பணிந்து நன்றியினை இந்த நல்ல நேரத்தில் அம்மா அவர்களின் பொற்பாதங்களில் சமர்ப்பிக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, குளத்தூர் தொகுதி, தைலா சில்க் ஸ்பின்னிங் மில் நிறுவனத்தில் பணிபுரியும் தொழிலாளர்களைப் பணி நிரந்தரம் செய்வது தொடர்பான ஆய்வு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை. ஆலையை 5–4–2003 முதல் மூடுவதற்கான அறிவிப்பை நிர்வாகம் அனுப்பியதைத் தொடர்ந்து, தொழிலாளர் நல உதவி ஆணையர் (சமரசம்) அவர்களின் முன்பு நடைபெற்ற சமரசப் பேச்சுவார்த்தையில், தொழிற்தகராறு சட்டப் பிரிவு 12, உட்பிரிவு (3)-ன்கீழ் 27–2–2003 அன்று ஒரு சமரச ஒப்பந்தம் ஏற்பட்டது. அதன்படி, அந்த நிறுவனம் மூடப்பட்டதை ஏற்றுக்கொண்டு மொத்தமுள்ள 96 தொழிலாளர்களும் இழப்பீட்டுத் தொகையைப் பெற்றுக்கொண்டு சென்றுவிட்டனர். எனவே, பணி நிரந்தரம் செய்வது தொடர்பான பிரச்சினை தற்பொழுது எழவில்லை.

டாக்டர் (திருமதி) ஆ. கருப்பாயி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அளித்த விளக்கத்திற்கு மிக்க நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 64, திரு. எம். சுப்பையா பாண்டியன், மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

64—

கழிவுநீர்க் கால்வாய் மற்றும் அடிகுழாய்கள்

***21126—திரு. எம். சுப்பையா பாண்டியன்:**

மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், கடையநல்லூர் நகரத்திலுள்ள பாரதியார் தெரு, பரசுராம தெரு ஆகியவற்றில் கழிவுநீர்க் கால்வாய்கள் மற்றும் புதிய அடிகுழாய்கள் அமைத்துத்தரும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

கடையநல்லூர் நகராட்சியில் போதுமான நிதி இல்லாததால் பாரதியார் தெரு மற்றும் பரசுராம தெருக்களில் கழிவுநீர்க் கால்வாய்கள்